# உயர் பதவிகளில் அதிக இடங்களில் இந்திய வம்சாவளியினர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை முதல் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்குமான நட்பு பல ஆண்டுகாலமாக தொடர்ந்து வருகிறது.

**இந்தியாவை ஈர்க்கின்ற நாடாக அமெரிக்கா இருக்கிறது!**

இந்தியாவில் வர்த்தகம், அறிவியல், கணினி ஆகிய துறைகளில் நல்லுறவு தொடர்கிறது. கேல்லப் என்ற நிறுவனத்தினுடைய பொது கருத்து கணிப்பின்படி அமெரிக்கர்களுக்கு பிடித்த நாடுகளின் பட்டியலில் ஏழாவது இடத்தை இந்தியா பெற்றிருக்கிறது. அதேபோல் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தவர்களின் பட்டியலில் இந்திய மக்கள் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்கள். அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

கடந்த ஆண்டு அமெரிக்கா குடியுரிமை பெற்றவர்களில் மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள் 12.7 விழுக்காடு. இந்தியர்கள் இரண்டாவது இடத்தை பிடித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தியாவை ஈர்க்கின்ற நாடாக அமெரிக்கா இருக்கிறது. அமெரிக்காவில் வாழ்கின்ற மக்களில் இந்தியர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு என்றாலும் உயர் கல்வியிலும், வர்த்தகத்திலும், சிறப்பான உயர் பதவிகளிலும் இந்திய வம்சாவளியினர் மிக அதிக இடங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

அமெரிக்க நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவில் இந்திய வம்சாவளி விஞ்ஞானிகள் இடம் பிடித்திருக்கிறார்கள். 2000 ஆண்டுகளுக்குப் பிறகு இருதரப்பு வர்த்தகமும் மூன்று மடங்காக உயர்ந்து விட்டது. இவையெல்லாம் இரண்டு நாடுகளுக்குமான நட்பின் அடையாளங்கள்.

வாழ்ந்து வருகிறீர்கள் என்பது உங்கள் மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்கும் போதே எனக்கு தெளிவாகத் தெரிகிறது. இந்தியா - அமெரிக்கா நட்பு என்பது இரண்டு நாட்டு அரசுகளின் உறவாக மட்டுமில்லாமல், இரண்டு நாட்டு மக்களின் நட்புறவாகவும் எப்போதும் அமைந்திருக்கிறது என்பது தான் இரு நாடுகளுக்கிடையிலான தனிச் சிறப்பு.

### அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்குப் பாராட்டு!

**இன்று எல்லோரும் உன்னதமான இடத்தை பிடித்திருக்கிறீர்கள் என்றால், அதற்கு காரணம் உங்களது உழைப்பும், அறிவும், திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும்தான் காரணம்.**

**மிகச் சிறந்த கல்வி, அந்த கல்வியில் அறிவுக் கூர்மை, தனித் திறமைகள், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை, குறிப்பிட்ட இலக்கை அடைய தளராத முயற்சிகள், இவை தான் உங்களை இந்த இடத்தில் கொண்டு வந்து உயர்த்தியிருக்கிறது. பணம், புகழ், அதிகாரம், வசதி வாய்ப்புகளை விட இந்த ஐந்தும் தான் உங்களை வளர்த்து இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை மற்றவர்களுக்கும் உணர்த்தி அனைவரின் வளர்ச்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.**

ஒட்டுமொத்த உலகின் நலனுக்கு இந்தியா - அமெரிக்கா உறவு மிக மிக முக்கியமாக இருக்கிறது. அமெரிக்க வாழ் இந்தியர்கள் இந்திய வம்சாவளியினர் மிகச் சிறப்பாக

**தமிழ்நாட்டில் அமெரிக்க நிறுவனங்கள்!**

அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு என்பது அமெரிக்காவின் ஈர்ப்புக்குரியதாக இருக்கிறது. புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களை நடத்தி வருகிறார்கள். இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருப்பது தான் இதற்கு காரணம்.

300க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளாக அதிகமாக அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நேரில் அழைக்கத் தான் நான் வந்திருக்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி மக்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அமெரிக்க நிறுவனங்களை தூண்ட வேண்டும் என்று உங்களை உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு செடியையோ, மரத்தையோ ஒரு இடத்திலிருந்து எடுத்து இன்னொரு இடத்தில் நட்டால் எல்லா செடியும் மரமும் அங்கு வளருவது இல்லை. ஆனால், நீங்கள் எல்லோரும் நாடுகள் கடந்து வந்திருந்தாலும் மிக மிக சிறப்பாக வளர்ந்திருக்கிறீர்கள். இது தான் நம்முடைய இந்தியருடைய பெருமை. இது தான் அமெரிக்காவின் வளம்.

**உழைப்பால் திறமையால் உன்னத இடம்!**

சிலரை சூழ்நிலைகள் துரத்தியிருக்கலாம், உங்களில் சிலர் வசதியான சூழ்நிலையிலிருந்து வந்திருக்கலாம், சிலர் வசதி குறைவினாலும் கூட இங்கு வந்திருக்கலாம். ஆனால், இன்று எல்லோரும் உன்னதமான இடத்தை பிடித்திருக்கிறீர்கள் என்றால், அதற்குகாரணம் உங்களது உழைப்பும், அறிவும், திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் தான் காரணம்.

மிகச் சிறந்த கல்வி, அந்த கல்வியில் அறிவுக் கூர்மை, தனித் திறமைகள், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை, குறிப்பிட்ட இலக்கை அடைய தளராத முயற்சிகள், இவை தான் உங்களை இந்த இடத்தில் கொண்டுவந்து உயர்த்தியிருக்கிறது. பணம், புகழ், அதிகாரம், வசதி வாய்ப்புகளை விட இந்த ஐந்தும் தான் உங்களை வளர்த்து இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை மற்றவர்களுக்கும் உணர்த்தி அனைவரின் வளர்ச்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் நம்முடைய நாட்டின் வளர்ச்சிக்கு காரணம். வேற்றுமை எண்ணம் துளியும் இல்லாமல் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி அவர்கள், அத்துடன் அவருக்கு துணை நின்ற அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### கடலூர் மேற்கு மாவட்டம்

## திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், செப்.3-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கேற்ப கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவதை குறித்து மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி சட்டமன்ற தொகுதி, ஒன்றிய, நகர, வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம், நாளை (04.09.2024 புதன் கிழமை) கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது. காலை 10 மணி மங்களூர் தெற்கு ஒன்றியம் ஜி.வி.மஹால், மங்களூர் 11.30 மணி மங்களூர் வடக்கு ஒன்றியம் விஷ்ணு மஹால், அடரி மதியம் : 1 மணி மங்களூர் கிழக்கு ஒன்றியம், தனலட்சுமி திருமண மண்டபம் ஆவினங்குடி மாலை: 4 மணி நல்லூர் தெற்கு ஒன்றியம், சரோ ரத்தின மஹால், பெண்ணாடம். அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில்கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, செப். 3-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (3.9.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் ராயல் பாலிடெக்னிக் கல்லூரி குளத்தூரில் நடைபெறுகிறது. மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமை வகிக்கிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும்,



சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கழக இளைஞரணி துணைச் செயலாளர்

நா.இளையராஜா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன் , மேயர் திலகவதி செந்தில்,

அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, பி.டி.அரசக்குமார்,

த.சந்திரசேகரன், வி.என்.மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை,

செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன்,

பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், ஆ.செந்தில்,

தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா இராசு.சந்தோஷ் ராப்பூசல் எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சார்ந்த பொது உறுப்பினர்கள்

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப். 3-

திராவிட முன்னேற்ற கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய அளவிலான பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மத்தூர் வடக்கு, தெற்கு ஒன்றியங்கள் , ஊத்தங்கரை வடக்கு தெற்கு மத்தியம் ஒன்றியங்கள், ஊத்தங்கரை பேரூர்,

பர்கூர் வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், காவேரிபட்டிணம் தெற்கு ஒன்றியம், போச்சம்பள்ளி ஒன்றியம், பர்கூர் பேரூர் உள்ளிட்ட ஒன்றியங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் குண.வசந்த அரசு , நரசிம்மன் , ரஜினி செல்வம் , குமரேசன் , எக்கூர் செல்வம் , ராஜேந்திரன், அறிஞர், மகேந்திரன், சாந்தமூர்த்தி, பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், தம்பிதுரை, ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். இந்த கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டு அதிகப்படியான வாக்குகள் பெற்றுத்தந்த கழகத் தோழர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்தார். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டு மக்களுக்காக செய்த திட்டங்களை எடுத்துக் கூறி சிறப்பு வாய்ந்த தலைவருக்கு ஒன்றிய அரசு பாரத ரத்னா விருது வழங்கி கௌரவப்படுத்த வேண்டும், கழக தோழர்கள் மக்கள் பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த கூட்டங்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், முன்னாள் மாவட்டச் செயலாளர் செங்குட்டுவன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய துணை செயலாளர் வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதிநாராயணசாமி, உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய பேரூர் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைக் கழக செயலாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

### கள்ளக்குறிச்சி மாவட்ட

## 'பாலிமர்' தொலைக்காட்சி செய்தியாளர் மறைவு!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, செப்.3-

கள்ளக்குறிச்சி மாவட்ட 'பாலிமர்' தொலைக்காட்சி செய்தியாளர் செல்வராஜ் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்த அமைச்சர் மு.பெ.சாமிநாதன்,

பாலிமர் செய்திகள் தொலைக்காட்சியின் கள்ளக்குறிச்சி மாவட்ட செய்தியாளர் செல்வராஜ் (வயது 47) (01.09.2024) அன்று உடல்நலக்குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகவும் மனவருத்தம் அடைந்தேன். அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என கூறியுள்ளார்.




திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக, இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டம் தேசிய பள்ளி மைதானத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. மாநகரக் கழக செயலாளர் மதிவாணன் வரவேற்புரையில், மாவட்ட அவை தலைவர் கோவிந்தராஜன் தலைமையில் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, கவிஞர் சல்மா, செந்தில், திவ்யா, மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், லீலாவேலு, குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட துணைச் செயலாளர் மூக்கன் நன்றியுரை ஆற்றினார்.



கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவையொட்டி விழுப்புரம் தெற்கு மாவட்டம் , விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ர.சதீஷ் ஏற்பாட்டில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி பரிசுகளையும், கோப்பைகளையும் வழங்கி வாழ்த்துரை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் E.பாலாஜி, துணை அமைப்பாளர்கள் ஆர்.பி.பரத், என்.சக்திவேல், அசோக், ஞான தேவா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, பேரூர் செயலாளர் பா.ஜீவா, மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், நிர்வாக பணியாளர் முன்னேற்றச் சங்கம் வாலிபால் மணி, நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் வனிதா அரிராமன், ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி ஆவின் தண்டபாணி, ஆறு சங்கர், பட்டு ஆறுமுகம், காமராஜ், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு , தொண்டர் அணி செ.அமரஜி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.